TAMIL NADU LEGISLATURE LIBRARY
1-OCT 1971
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1970 மார்ச் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத்தலைவர் **புலவர் நா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Udayarpalayam Police firing

* 409 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to place on the Table of the House a copy of the report of the Enquiry Commission on the Udayarpalayam Police firing?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த நிகழ்ச்சியின் விளைவான சில வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு நடவடிக்கை தொடரப்பட்டுவருவதால், விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையை இம்மன்றத்தின் முன் வைப்பது தள்ளிப் போடப்படுகிறது.

திரு. ஆர். கருப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் எத்தனை பேர்? அப்படி துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு அரசாங்கத்தால் ஏதேனும் நட்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு அரசாங்க உதவித் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. தங்கராஜ் என்பவருடைய குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாயும், சுந்தரமூர்த்தி என்பவருடைய குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாயும், வெள்ளையப்படையாச்சி என்பவருடைய குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாயும், வடிவேலு என்பவருடைய குடும்பத்திற்கு 500 ரூபாயும் அரசு 19---11---1969 அன்று அளித்திருக்கிறது.

திரு. கே. விநயகம்: தலைவர் அவர்களே, போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு முன்னாலே அவர்கள் ஊர்வலம் வந்தார்கள் என்று சொல்லப்படுகிறதே அவர்கள் எந்தக் கோரிக்கைக்காக வந்தார்கள்? அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உடையார்பாளையம் தாலுக்காவை ஜெயங்கொண்டம், அரியலூர் தாலுக்காக்களாகப் பிரிப்பதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். அரசு திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரையும், வருவாய்த் துறை வாரியத்தையும் கலந்து, ஜெயங்கொண்டம் தாலுக்கா என்பதைத் திரும்பவும் பழையபடியே உடையார்பாளையம் தாலுக்கா என்று மாற்றி 6---12---1968 அன்று உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த விசாரணை அங்கு நடைபெற்றபோது, இது சம்பந்தமாக அதிகாரி யாராவது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டாரா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. ராமய்யன் என்ற டெப்டி போலீஸ் சூப்பிரண்டெண்ட், வழக்கு விசாரணை நல்ல முறையில் நடைபெறவேண்டுமென்பதற்காகத் துப்பாக்கிச்சூடு நடந்தவுடன் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டார்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சர்க்கார் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தினால்தானே இந்தக் கிளர்ச்சி நடந்தது? இந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் எந்தெந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள்? அல்லது அவர்கள் எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வாக்குறுதியை அரசு நிறைவேற்றும் என்று முன்கூட்டியே தெரிந்துதான் கிளர்ச்சி நடைபெற்றது. உடனே கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Chief Minister whether the finding of the Enquiry Commission was that the firing was justified?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வழக்குமன்றத்திலே இருக்கின்ற காரணத்தால் அதை இப்போது இம்மன்றத்தின் முன் வைப்பதற்கில்லை.

ஆபாசச் சுவரொட்டிகள்

* 410 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் ஒட்டப்பட்டுள்ள ஆபாசச் சுவரொட்டிகளை அகற்றுவது போல் தமிழகத்தில் ஏனைய ஊர்களிலும் இந்த முயற்சி மேற்கொள்ளும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம். தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

திருகு கொடவாசல் கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, தேர்தல் நேரங்களில் தலைவர்களைப்பற்றி ஆபாசமாக சுவரொட்டிகள் ஒட்டப்படுகிறதே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்கள்மீது பொதுமக்களே ஜனநாயக ரீதியில் நடவடிக்கை எடுத்துவிடுகிறார்கள்.

THIRU T. MARTIN : Mr. Speaker, sometimes the posters which are pasted on the walls do not represent the actual scenes that we see in the picture for which advertisement is souiht